# புத்திரிக்கை செய்தி, நாள் 06.06.2023

தருமபுரி மாவட்ட முன்னாள் மாவட்ட ஆட்சியரும், தற்போதைய சென்னை அறிவியல் நகரின் துணை தலைவராக பணிபுரிந்து வரும் திருமதி.S.மலர்விழி, இ.ஆ.ப அவர்கள் தருமபுரி மாவட்ட ஆட்சியராக 28.02.2018 –ந்தேதி முதல் 29.10.2020 ந்தேதி வரை பணிபுரிந்தபோது, தருமபுரி மாவட்டத்தில் உள்ள 251 கிராம ஊராட்சிகளுக்கு தமிழக அரசின் ஐந்தாவது மாநில நிதி குழு மானிய நிதியிலிருந்து 20.11.2019ந்தேதி மற்றும் 28.04.2020–ந்தேதி சொத்துவரி வசூல் இரசீது புத்தங்கள், குடிநீர் கட்டணம் வசூல் இரசீது புத்தங்கள். தொழில்வரி வசூல் இரசீது புத்தங்கள் மற்றும் இதர கட்டண புத்தங்கள் மொத்தம் 1,25,500 எண்ணிக்கையில் 2 தனியார் நிறுவனங்களிலிருந்து கொள்முதல் செய்து கிராம ஊராட்சிகளுக்கு விநியோகம் செய்துள்ளார். இந்த புத்தகங்கள் கொள்முதல் செய்ததில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படாமல் நேரடியாக 2 தனியார் நிறுவனங்களிலிருந்து மேற்படி வரிவசூல் புத்தங்களை அதிகபட்ச விலைக்கு கொள்முதல் செய்ததில் திருமதி.S.மலர்விழி, இ.ஆ.ப அவர்கள் 2 தனியார் நிறுவன உரிமையாளர்களுடன் கூட்டு சேர்ந்து ரூ.1,31,77,500/– கையாடல் செய்தது தொடர்பாக தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் 05.06.2023–ந்தேதியன்று 1) திருமதி.S.மலர்விழி, இ.ஆ.ப 2) திரு.H.தாகீர்உசேன், கிரசண்ட் நிறுவன உரிமையாளர், சென்னை 3) திரு.வீரய்யா பழனிவேல், நாகா டிரேடர்ஸ் உரிமையாளர் ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதுதொடர்பாக, சென்னையில் உள்ள திருமதி.S.மலர்விழி, இ.ஆ.ப அவர்களின் வீடுகள் உள்ளிட்ட 10 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் சென்னையில் ஐந்து இடங்களிலும், விழுப்புரம் மற்றும் தருமபுரியில் தலா ஒரு இடங்களிலும் மற்றும் புதுக்கோட்டையில் மூன்று இடங்களிலும் சோதனை நடைபெற்று வருகின்றது.